# True Disciple

# உண்மை சீஷன்

September - October 2017 செப்டம்பர் - அக்டோபர்



## Fruit Bearing Life

## கனி தரும் வாழ்வு

# FRUIT-BEARING CHRISTIAN

***Rev. Dr. Jerry Daniel***

Jesus Said,

*This is to my Father's glory, that you bear much fruit. John 15:8*
*I chose you and appointed you to bear fruit.  John 15:16*
*Produce fruit in keeping with repentance. Matt. 3:8*

Every Christian is expected to bear fruit. Fruit is a picture of spiritual blessing in Christian's life. The fruit of the Spirit should characterize our daily lives. It is the most important mark of the life of a Christian. John Blanchard says, 'A fruitless person is not a failed Christian, but a false one - in other words, not a Christian at all'.  In this article, let us study briefly the different aspects of bearing fruit.

**1. The PURPORT (Meaning) of Bearing Fruit**

The New Testament gives several answers to the meaning of bearing fruit. **First of all,** developing Christian character is bearing fruit.  Every godly trait developed in us that reflects the character of Jesus is a fruit. Apostle Paul describes the fruit of the Spirit in nine terms in Galatians 5:22-23, and Peter urges the development of seven accompaniments to faith in order that we might be fruitful (2 Peter1:5-8). To show these character traits is to bear fruit in one's life. **Secondly,** doing good works is bearing fruit. The Bible says, `bearing fruit in every good work' (Colossians 1:10). **Thirdly,** winning souls for Christ is bearing fruit. Those who come to Christ through our witness are fruit (Romans 1:13). So every Christian should be involved in winning souls for Christ. That is why God has chosen us (John15:16).

**2. The PURPOSE of Bearing Fruit**

There are at least three reasons given in the gospels why we should bear fruit. First, fruit bearing glorifies God. Jesus said 'this is to my Father's glory, that you bear much fruit' (John 15:8). **Secondly,** we have been appointed to bear fruit (John 15:16; Luke 13:6-9). **Thirdly,** fruit is the characteristic of a Christian. Just as a tree is recognized by its fruit, so is a Christian (Matthew 12:33; 7:20). The spiritual fruit is decisive, visible difference between Christian and a non-Christian.

**3.  The PRECONDITIONS for Bearing Fruit**

The bible gives many conditions for fruit bearing. Let us see them now.

1. We must abide in Christ. 'He who abides in me, and I in him, bears much fruit' (John 15:5). The word abide comes at least 10 times in John 15:1-10. As the Lord puts special emphasis on the word `abide', he is stressing on the importance of abiding in order to produce good fruit. To abide means to have intimate and unbroken fellowship with our Lord Jesus Christ.
2. We must be Spirit-filled. We need to be filled with the spirit to produce the fruit of the Spirit (Gal.5:22,23). The sap that went through the vine to the branches is symbolic of the Holy Spirit and the power of God.

3. We must die to self. Jesus said, 'if the kernel of wheat dies, it produces much grain'. (John 12:24). In order to be Spirit-filled, we must crucify the flesh and die to self daily.
4. We must meditate and obey God's word. The bible says that he who meditates the law of the Lord is like a tree planted by the streams of water which yields its fruit in season (Psalm1:2,3).
5. We must have fellowship in the church. In the church we can have fellowship with one another and encourage one another. Through fellowship and teaching in the church, we can become mature Christians, able to bear much fruit (Acts 2:42-44).
6. We must trust God at all times. The Bible says that if we trust the Lord and have our confidence in him, we will never fail to bear fruit (Jeremiah 17:7,8).
7. We must allow God to prune us. God helps us to produce much fruit when we allow him to prune and purge us through His word (Heb. 4:12) and through trials and hardships (John 15:2; Heb. 12:11; Job 23:10). We must not grumble against God during these difficult times. Instead, we should let Him accomplish His purpose in our lives.

**4. The PROMISE for Bearing Fruit**

Those who abide in the True Vine can rest assured of certain precious and sure promises mentioned in John 15:7-11!

(1) Assurance of Answers to our Prayers (v.7). When we are abiding as we should be, and when we are drawing our life from Him, then His will will be our will. That is, every time we pray and everything we pray for will fit perfectly with His will and He will grant our requests. (2) Amazing Love (v.9). Jesus loves all men always, but those who are abiding in Him and bear fruit have entered into a special, ever-deepening relationship with Him. (3) Abiding Joy of Christ (v.11). Joy is not happiness, which depends upon happenings, but it is a deep settled assurance and confidence that God always does in our lives what is good for us. When we bear fruits, God fills our hearts with "joy unspeakable and full of glory" (I Peter 1:8) and this ignites our heart to serve Him effectively and fervently.

**5. The PUNISHMENT for Not Bearing Fruit**

Jesus said, `Every tree that does not bear good fruit is cut down, and thrown into the fire' (Matthew 3:10). The Lord is very serious about our fruitlessness. In Luke 13, Jesus says that the Lord looks for fruit in our lives (v.6). If he does not find fruit in our lives even after several years of having known him, he is disappointed and gets angry (v.7). In John 15, Jesus said that the Lord cuts off every branch that bears no fruit and throws them into fire (John 15:2,6).' Worldliness, worries and wealth (material-mindedness) choke the Word and make us unfruitful (Matt. 13:22). Fellowship with the ungodly (Ps. 1:1-3) will also be a hindrance to fruit-bearing. To escape God's judgment and punishment, we must diligently steer clear of these things and allow God's Word to take root in our lives and become fruitful.

May God bless you and enable you to bear much fruit!

# LOVE, THE MOST EXCELLENT WAY

1 Corinthians 13 is considered the love chapter of the Bible. It is probably one of the most beautiful passages in all of Scriptures. It contains the most eloquent and profound words ever written on the subject of love.

## 1. PRE-EMINENCE OF LOVE (1 Cor. 13: 1-3)

Love is pre-eminent. It is indispensable for victorious family life and Christ-like living. It is the touch stone of Christianity. Paul calls this love 'the most excellent way. 'Without love, our ministry through the gifts, our miracles of faith, our magnanimity and our martyrdom are all useless (vv. 1-3).To put it plainly, without love, God's love, you have nothing, you are nothing, and you gain nothing.

## 2. PRACTICE OF LOVE (1 Cor. 13: 4-7)

Paul goes on to give us 15 characteristics of love in this section. **Love is patient.** The idea here is of long suffering even in the midst of trial, of bearing up under hardship without complaining. **Love is kind,** not harsh or insensitive. **Love does not envy.** It does not resent what others have or covet their possessions or lifestyle. **Love does not boast** or brag or call attention to it. **Love is not proud.** The word used here can also be translated as arrogant. This is the person that always has to be right. Someone once said that "arrogance is big-headed, but love is big-hearted."

He goes on to say that **love is not rude.** This is also been translated as love "does not act unbecomingly." In other words, love behaves itself, is considerate for others, and gracious. **Love is not self-seeking** or selfish in any way. It doesn't insist on its own way. **Love is not easily angered.** This is also translated as "not provoked." The word "easily" is not in the original Greek. The idea is that love keeps you from being quick tempered. It gives you a long fuse, not a short one. **Love keeps no record of wrongs.** This is accounting terminology. Keeping accurate records is good as far as your money is concerned, but it is not good as far as your relationships are concerned. Do you keep a record of the wrongs you have suffered? Do you have a list? Are you holding a grudge? Do you say things like "I'll forgive but I'll never forget"? When God forgives us, he wipes the records clean.

**Love does not delight in evil but rejoices with the truth.** In other words, we don't rejoice when others fall into sin and suffer the consequences. We're not looking to tear them down but to build them up. The truth builds people up. We rejoice when righteousness prevails, when good things happen, when people succeed in following God, when there are testimonies of truth that encourage one another. **Love always protects.** The idea here is bearing up or helping. **Love always trusts.** It sees the best in someone. **Love always hopes.** There is an optimistic outlook in someone filled with God's love. **Love always perseveres.** It's there for you. It stays when others walk out. This is a great definition of how love behaves. In fact, it is simply a description of the character of Christ. You could put his name in each of these phrases and they would all work. Try it sometime. Then put your name there. How's your love life?

## 3. PERMANENCE OF LOVE (1 Cor. 13: 8-13)

Love is eternal and permanent. It will never end or cease to exist. That is why Paul says that love never fails. When everything else is gone, love will always endure. The spiritual gifts will fail. Prophecies, as good as they are and as encouraging as they can be, will cease. Tongues, however eloquent or edifying will be stilled. Even knowledge, growing exponentially, one day will pass away. Love is the highest expression of God the world will ever see because it is eternal. Without it, all else is useless, imperfect and temporary. Nothing can take its place. **Does love characterize what you do and why you do it?**

# CHRISTIAN JOY

Joy is something that is unaffected by circumstances. It is a state of mind and an orientation of the heart. Joy is deep. It is a settled state of contentment, confidence and hope. Christian joy is found in following ways.

1. **Salvation**
   There is joy in salvation. It's at our conversion to Christ that we first experience this joy. It's told about the Philippian jailor that "he rejoiced, having believed in god with all his household" (Acts 16:34). Luke 2:10; Isaiah 12:3; 35:10; 61:10; Psalm 51:12

2. **Scriptures**
   The psalmist brings out this aspect of joy in Psalm 119:54, 92,111. Jeremiah says, "When your words came, I ate them; they were my joy and my heart's delight.

3. **Spirit**
   The fruit of the Spirit is joy. Joy comes from being filled with the Holy Spirit (Rom.14:17; Psalm 36:8)

4. **Supplication**
   Jesus said, ask, and you will receive, that your joy may by full (John 16:24). But more than answers to prayer, praying itself is delightful. One of the wonderful promises of God is, "I will make them joyful in my house of prayer (Isa. 56:7)

5. **Soul winning**
   This is joy in bringing people to the Lord. The joy of the soul winner is the joy of the harvest. Those who sow in tears shall reap in joy (Ps. 126:5, 6). Any Christian without a heart for evangelism and passion for souls will be joyless.

6. **Saints fellowship**
   Psalmist says, "I went with them to the house of God, with shouts of joy' (Ps. 42:4). David says, "I rejoiced with those who said to me,' Let us go to the house of the Lord." (Ps. 122:1). There is joy in fellowshipping with the saints of God (Ps. 133:1; 2 Tim. 1:4; 1 John 1:3, 4; 2 John 12)

7. **Sharing**
   Joy is also found in sharing and giving. Macedonians shared their material possessions with an overflowing joy (2 Corinthians 8:2).

***Be Joyful always (1 Thess. 5:16)***
***Rejoice in the Lord always. I will say it again: Rejoice! (Phil. 4:4)***

# WHEN DO WE NEED REVIVAL?

1. We need revival when parties are better attended than prayer meetings.
2. We need revival when we do not love him as we once did.
3. We need revival when we seldom think thoughts of eternity.
4. We need revival when we make little effort to witness to the lost sinner.
5. We need revival when we have time for recreation and sports, but not for bible study and prayer.
6. We need revival when our Christianity is joyless and dry.
7. We need revival when our hearts are cold and are eyes are dry.
8. We need revival when we are bored with worship.
9. We need revival when believers can be at odds with each other and not feel compelled to pursue reconciliation.
10. We need revival when we aren't exercising faith and believing god for the impossible.
11. We need revival when the fire has gone out in our hearts, our marriages, and the church.
12. We need revival when the family is not praying together.
13. We need revival when our singing is half-hearted and our worship is lifeless.
14. We need revival when we know the truth in our heads that we are not practicing in our lives.
15. We need revival when we would rather make money than give money.
16. We need revival when people have to be entertained to be drawn to church.
17. We need revival when we are unmoved by the fact over 2.5billion people in the world have never heard the name of Jesus.
18. We need revival when we aren't seeing regular evidence of the supernatural power of God
19. We need revival when we are more concerned about our children's education and their athletic activities than about the condition of their souls.
20. We need revival when we don't long for the fellowship of God's people.

# "EVIDENCES OF TRUE REVIVAL"

*Nehemiah 8:1-10*

The Israelites displayed evidences of true revival at the completion of the wall.

1. **HARMONY AMONG THE PEOPLE**
   *"...the people gathered as one..."* (8:1)
2. **HUNGER FOR THE WORD**
   *"...all the people were attentive to the book of the law..."* (8:3)
3. **HONOR FOR THE LORD**
   *"...they bowed low and worshiped the Lord..."* (8:6)
4. **HATRED FOR SIN**
   *"All the people were weeping when they heard..."* (8:9)
5. **HAPPINESS IN THE LORD**
   *"...for the joy of the Lord is your strength..."* (8:10)

## "Revival: Who Needs It?"

**Psalm 85**

*Will you not revive as again, that your people may rejoice in you?*

In verses 4-8 the Psalmist uses the first person pronoun seven times. Who is it that needs revival?

1. **The Unexcited**, whose first love has grown cold.
2. **The Unmoved**, who are no longer stirred by sin, souls, or the Savior.
3. **The Unrepentant**, who are unbroken and no longer blush at sin.
4. **The Uncommitted**, who are at ease in Zion and are saved spiritual slumberers.
5. **The Unidentified**, who have not obeyed our Lord's command to be baptized or who have no commitment to His local church.
6. **The Unsure**, those dealing with doubt.
7. **The Unsaved,** for whom Jesus died.

# Slogans of Reformation

The year 2017 marks the 500th Anniversary of the Protestant Reformation. It was on the 31st of October 1517 that Martin Luther nailed his 95 Theses, against unbiblical beliefs and practices, on the main door of the All Saints Cathedral in Witten-berg, Germany.

Reformation is to bring back the Church from where it is to where it should be. Reformation includes Revival, Renewal and Restoration. Reformation in general means correction of error, or abolition of abuses and malpractices.

**Slogans of Reformation**

The summary of the Reformers' theological conviction is as follows, in Latin and in English

1. Scripture Alone - Sola Scriptura
2. Faith Alone - Sole Fide
3. Grace Alone - Sola Gratia
4. Christ Alone - Solus Christus
5. Glory of God Alone - Soli Deo Gloria.

**1. Scripture Alone**

The entire Bible is the inspired by the Holy Spirit (2 Tim. 3:16). The Bible is inerrant, infallible and indestructible (Psalm 19:7; John 10:35; Mark 13:31). The Bible is sufficient. That's why the Apostles firmly stated that we must not even think “beyond what's written” (1 Corinthians 4:6). We must not add or take away anything from the word of God (Revelation 22:18,19). Several Churches keep traditions along with the Scriptures. Jesus in His time vehemently condemned this practice (Mark 7:9,13). Our entire life must be characterised by “what the Bible says!” (Romans 4:3; 10:8; 11:2).

**2. Faith Alone**

The Scripture text that ignited the mind of Martin Luther was Romans 1:16, 17, “THE JUST SHALL LIVE BY FAITH.” The message is that we are NOT saved by any works of religion but only by faith on Christ. Apostle Paul emphasizes it in Ephesians 2:8,9. Then arises a question: “What about the statement that faith without works is dead?” (James 2:17). Apostle James in this passage deals essentially with the works of charity (2:14-16). He does not speak about works as a condition for salvation, but rather an evidence of salvation. This is clarified by Apostle Paul in Ephesians 2:9,10, “We are saved not BY works, but FOR works!”

### 3. Grace Alone

On our side, justification is all by faith; and on God's side it's only through His grace (Romans 3:23,24). Salvation is God's "gift" through grace (Eph. 2:8,9). It's not an award or a reward or a prize, but a gift. A gift cannot be earned or merited.

Grace is not a licence to sin. It's actually God's inner enablement to us to overcome sin. This is clear from Romans 6:14. Remember, if our faith is what carries our prayers to God, it is His grace which brings the answers! That's why His throne is called the "Throne of Grace!" (Hebrews 4:16). Keep praising God for His daily grace. (Lam. 3:22, 23).

### 4. Christ Alone

Christ alone! This slogan has many implications —

- ★ Christ is the only Way for salvation (John 14:6; Acts 4:12).
- ★ Christ is the only Mediator (1 Timothy 2:5,6)
- ★ Christ is the only Priest for us before God (Hebrews 7:24,25).
- ★ Christ is the only Foundation of the Church (1 Cor. 3:6, 11)
- ★ Christ is not to be compared with anyone.
- ★ All the blessings of God are through Christ only (Ephesians 1:3)

### 5. Glory of God Alone

"The chief end of man is to glorify God!" That's why Bible says, "Whether you eat or drink, or whatever you do, do all to the glory or God" (1 Corinthians 10:31). The life of Christ is the perfect Example of bringing glory to God in everything. The birth, life and deeds of Jesus all bring glory to God (Luke 2:14; Matt. 9:8; John 17:4). The Apostles were also extremely sensitive in this matter of giving glory to God (Acts 3: 12, 13; 10:25, 26; 14: 11, 15). Beloved, we may have several plus points in our life, but we cannot boast of any of them. Let us always give all the glory to God (Jer. 9: 23, 24; 1 Cor. 1:29, 31). Not to us, Lord, not to us but to your name be the glory (Psalm 115:1) must be our prayer!

***-This article has been compiled from the book "Here I Stand".***

## ஆண்கள் ஐக்கியம் - Men's Fellowship

பிரதி மாதம்

**3வது திங்கட்கிழமை மாலை 7.00 மணி**

திருச்சபையிலுள்ள அனைத்து ஆண்களும் பங்குபெறும்படி அன்புடன் அழைக்கிறோம்.

## ஆவிக்குரிய எழுப்புதல் கூட்டங்கள்

## Spiritual Revival Meetings

நாள் : **அக்டோபர், 20,21,22, (வெள்ளி, சனி, ஞாயிறு)**

நேரம் : **தினமும் மாலை 6.30 மணி**

இடம் : **சிட்டி ரிவைவல் ஏ.ஜி.சர்ச்**

தேவ செய்தி : **Rev.எபனேசர்** (மதுரை)

# இசைப் பயிற்சி வகுப்புகள்

# Music Classes

இடம் : **சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச்**

ஜென்னி பிளாசா, திருச்சி – 1.

Guitar, Keyboard,
Rhythm Pad
& Drums

**செவ்வாய் தோறும் மாலை 6.00 மணி முதல் 8.15 மணி வரை**

*தசமபாகம், காணிக்கைகள் & நன்கொடைகளை கீழ்கண்ட வங்கி கணக்கில் செலுத்தலாம்.*

**Your Offerings and Donations Can Be Sent to**

**Account Name: City Revival AG Church**
**Account Number: 35354599169**
**Bank Name: State Bank of India**
**IFSC Code: SBIN0000930**
**Branch Code & Address: 00930**
**Tiruchirappalli Main Branch,**
**7, MacDonalds Road, Cantonment, Trichy – 620 001**

Kindly intimate us through email or sms immediately after you have sent your offering through bank transfer so that we can confirm the receipt of your offering.

# கனி தரும் கிறிஸ்தவன்

பாஸ்டர். **ஜெரி டேனியல்**

நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார். எனக்கும் சீஷராயிருப்பீர்கள். யோவான் 15:8

ஒவ்வொரு கிறிஸ்தவனும் கனி தர வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். கனி நிறைந்த வாழ்க்கை ஆவிக்குரிய ஆசீர்வாதத்தைக் காட்டுகிறது. நம்முடைய வாழ்க்கை ஆவியின் கனிகள் நிறைந்ததாக இருக்க வேண்டும். கனிகொடுத்தலிலுள்ள சில காரியங்களை இங்கு தியானிப்போம்.

**1. கனி கொடுத்தல் என்றால் என்ன? (The PURPORT of Bearing Fruit)**

பரிசுத்த வேதாகமம் புதிய ஏற்பாட்டில் கனி கொடுத்தல் என்பதற்கு சில பதில்களை நமக்குத் தருகிறது. **முதலாவது**, நமது நற்குணங்கள் கனிகளுக்கு ஒப்பாகக் கூறப்பட்டுள்ளது. ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் (கலா.:5 : 22, 23). மேலும் 2 பேதுரு 1: 5 – 8 வசனங்களில் சில குணங்கள் கூறப்பட்டுள்ளன. இத்தகைய நற்குணங்கள் நமக்குள் காணப்படுமானால் நாம் கனி கொடுக்கிறோம் என்று அர்த்தம். **இரண்டாவதாக**, நமது நற்கிரியைகள் கனி கொடுத்தலுக்கு ஒப்பாக இருக்கிறது.வேதம் சகலவித நற்கிரியைகளாகிய கனிகளைத் தந்து (கொலோ. 1 : 10) என்று கூறுகிறது. **மூன்றாவதாக**, நற்செய்தி அறிவித்து ஆத்துமாக்களை ஆதாயம் செய்வது கனி தருவதாகும் (யோவான் : 15 : 16, நீதி. 11: 30, ரோமர் : 1: 13).

**2. கனி கொடுத்தலின் நோக்கம் என்ன? (The PURPOSE of Bearing Fruit)**

நாம் ஏன் கனி கொடுக்க வேண்டும் என்பதற்கு வேதாகமம் நமக்குத் தெளிவான பதில் கொடுக்கிறது. **முதலாவது**, கனி கொடுத்தல் தேவனுக்கு மகிமையைக் கொண்டு வருகிறது. இயேசு சொன்னார் நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார். (யோவான் 15 : 16). **இரண்டாவதாக**, நாம் கனி கொடுக்கும்படியாக தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறோம் (யோவான் 15 : 16). நாம் ஒரு மரத்தை நட்ட பின் அதில் கனியை எதிர்ப்பார்ப்பது போல தேவனும் நம்மில் கனியை எதிர்பார்க்கிறார் (லூக்கா 13 : 6 – 9). கனி கொடாவிட்டால் தேவனுடைய தண்டனை நம்மேல் வரும் (யோவான் :15 : 2,6). **மூன்றாவதாக**, ஒரு கிறிஸ்தவனை அடையாளம் கண்டுகொள்ள கனி அவசியம். எந்த மரமும் கனியினால் அறியப்படுவதுபோல, ஒரு கிறிஸ்தவனும் தன்னுடைய கனியினால் தான் அறியப்படுவான். (மத்தேயு : 7 : 20, 12 : 33).

**3. கனிகளை கொடுக்க என்ன செய்ய வேண்டும்?**
**(The PRECONDITIONS for Bearing Fruit.)**

நாம் கனிகள் கொடுக்க கீழ்க்கண்ட நிபந்தனைகள் நிறைவேற்ற வேண்டும்.

1. கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும். ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் (யோவான் : 15 : 5) என்று இயேசு சொன்னார். யோவான் 15 : 1-10 வசனங்களில் நிலைத்திருத்தல் என்ற வார்த்தை 10 முறை வருகிறது. நிலைத்திருத்தல் (Abiding) என்றால் தேவனோடு நெருங்கிய பிரியாத உறவு கொள்ளுதலாகும்.
2. ஆவியினால் நிறைந்திருக்க வேண்டும். ஆவியின் கனி கொடுக்க ஆவியானவரின் உதவி மிகவும் அவசியம் (எபே. 5:18; கலா. 5 : 22, 23).

3. சுயத்திற்கு மரிக்க வேண்டும். வேதம் சொல்லுகிறது, "கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிடில் தனித்திருக்கும். செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்" (யோவான் 12 : 24). தேவ ஆவியினால் நிரப்பப்பட்டுக் கனிகொடுக்க, மாம்சத்தை தினமும் சிலுவையில் அறைந்து சுயத்திற்கு அனுதினமும் சாகவேண்டும்.

4. வேதத்தை தியானித்து அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். கர்த்தருடைய வேதத்தில் இரவும், பகலும் தியானமாய் இருக்கிற மனுஷன், நீர்க்கால் ஓரமாய் நடப்பட்டு தன் காலத்தில் தன் கனியைக் கொடுக்கும் மரத்தைப் போல் இருப்பான் என்று வேதம் கூறுகிறது (சங். 1: 2,3).

5. சபை ஐக்கியம் வேண்டும். திருச்சபையிலுள்ள பரிசுத்தவான்களின் ஐக்கியமும், போதனையும் நாம் கிறிஸ்துவுக்குள் முதிர்ச்சி அடைவதற்கும், கனிதருவதற்கும் மிகுந்த அவசியம் (அப். 2: 42-44).

6. தேவன் மேல் எப்பொழுதும் நம்பிக்கையும் விசுவாசமும் வேண்டும். கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் தப்பாமல் எப்பொழுதும் கனி கொடுக்கிற மரத்தைப் போலிருக்கிறான் என்று வேதம் கூறுகிறது (எரே. 7: 8).

7. தேவன் நம்மைப் பரிசுத்தமாக்க இடமளிக்க வேண்டும். தேவன் நம்மைத் தம்முடைய வார்த்தையின் மூலமாகவும் (எபி. 4 : 12; யோவான் : 15 : 2), உபத்திரவங்களின் மூலமாகவும் (எபி. 12 : 11, யோபு : 33 : 10) நம்மைப் புடமிட்டுப் பரிசுத்தமாக்க விரும்புகிறார். நாம் இச்சமயங்களில் முறுமுறுக்காமல் அவரைத் துதித்து அவர் தம்முடைய கிரியையை நம் வாழ்வில் நிறைவேற்ற இடமளிக்கும் போது நாம் மிகுந்த கனிகளைக் கொடுப்போம்.

### 4. கனி கொடுத்தலின் ஆசீர்வாதங்கள் (The PROMISE for Bearing Fruit)

நாம் கிறிஸ்துவில் நிலைத்திருந்து கனி கொடுக்கும் போது, அவருடைய உண்மை சீஷர்களாயிருக்கிறோம் (யோவான் 15 : 8). மேலும் தேவன் நமக்கு சில ஆசீர்வாதங்களைத் தருகிறார். முதலாவது நம்முடைய ஜெபங்களுக்குப் பதிலைத் தருகிறார். நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும் (15 : 7). இரண்டாவதாக, தேவன் தம்முடைய அளவற்ற ஆச்சரியமான அன்பை நம்மேல் காண்பித்து நம்மை ஆசீர்வதிக்கிறார் (யோவான் 15 : 9). மூன்றாவதாக, நிலையான நிறைவான சந்தோஷத்தை நமக்கு தருகிறார் என்று யோவான் 15 : 11ல் வாசிக்கிறோம்.

### 5. கனி கொடுக்காவிட்டால் வரும் தண்டனை (The PUNISHMENT for not Bearing Fruit)

இயேசு, "நல்ல கனி கொடாதிருக்கிற மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியில் போடப்படும்" என்று கூறினார் (மத்.3:10). ஒவ்வொரு நாளும் இயேசு நம்மில் கனியை எதிர்பார்க்கிறார் (லூக்கா : 13: 6). கனிகளை நாம் கொடாவிட்டால் தேவனுடைய தண்டனைக்குப் பாத்திரமாக மாறி விடுகிறோம் (லூக்கா 13 : 7; யோவான் 15 : 2, 6 : மத். 21 : 19). உலகக் கவலை, சிற்றின்பங்கள், ஐசுவரியத்தின் மயக்கம் (லூக்கா : 8 : 14), துன்மார்க்கரோடு உள்ள ஐக்கியம் (சங். 1:1-3) ஆகியவைகள் நம்மைக் கனியற்றவர்களாக மாற்றுகிறது. ஆகவே நாம் தேவனுடைய தண்டனைக்குத் தப்ப இவைகளிலிருந்து முற்றிலுமாக விடுதலை பெற்று, கிறிஸ்துவிலும் அவருடைய வசனத்திலும் ஆழமாக நிலைத்திருந்து கனிகொடுக்கத் தீர்மானிப்போம்! தேவன் நம்மை ஆசீர்வதிப்பார்! நம்மில் மகிமைப்படுவார்! அல்லேலூயா!.

# அன்பே பிரதானம் ! 1 கொரிந்தியர் 13

**1. அன்பின் மேன்மை (PRE-EMINENCE OF LOVE) - 13:1-3**

நாம் தியானிக்கும் 1 கொரிந்தியர் 13ம் அதிகாரம், வேதாகமத்தில் அன்பின் அதிகாரமாகச் சொல்லப்படுகிறது. அன்பு, தனித்தன்மை வாய்ந்தது. வெற்றியுள்ள குடும்ப வாழ்விற்கும், கிறிஸ்துவைப் பிரதிபலிக்கும் வாழ்க்கைக்கும், அன்பு இன்றியமையாத ஒன்று. அன்பு தான் கிறிஸ்தவத்தின் "உரைக்கல்". பவுல் இந்த அன்பை "மிகச் சிறந்த வழி" என அழைக்கிறார். அன்பு இல்லாமல் வரங்களின் மூலம் ஊழியம் செய்வதோ, விசுவாசத்தினால் அற்புதங்கள் செய்வதோ, பரிசுத்தமாய் ஜீவிப்பதோ, இரத்தச் சாட்சியாய் மரிப்பதோ எல்லாமே வீண் (வசனம் 1-3). அன்பு நம்மில் இல்லை என்றால்.... தேவ அன்பும் இல்லை, நாமும் ஒன்றுமில்லை, நமக்கு எந்த லாபமும் இல்லை.

**2. அன்பின் அடையாளங்கள் (PROOF OF LOVE) - 13:4-7**

அன்பைப் பற்றி இந்தப் பகுதியில் பவுல் 15 விளக்கங்களைத் தந்திருக்கிறார்.

**அன்பு சாந்தமுள்ளது :** நீண்ட துன்பங்களிலும், சோதனை வேளைகளிலும் முறுமுறுப்பில்லாமல் எல்லாவற்றையும் சகித்துக்கொள்ள வேண்டும்.

**அன்பு தயவுள்ளது :** மற்றவர்களைப் புரிந்துகொண்டு தயவும் இரக்கமும் பாராட்ட வேண்டும். மற்றவர்களைப் புண்படுத்தியோ, காயப்படுத்தியோ பேசிவிடக்கூடாது.

**அன்புக்கு பொறாமை இல்லை :** பிறர் மேல் வன்மமோ, சீற்றமோ கொள்ளக்கூடாது. அவர்களின் உடமைகளை இச்சிக்கக் கூடாது.

**அன்பு தன்னைப் புகழாது :** நம்மைக் குறித்துத் தற்பெருமையாகப் பேசுதல் கூடாது.

**அன்பு இறுமாப்பாயிராது :** இங்கே அகந்தை என்ற அர்த்தத்தில் சொல்லப்பட்டுள்ளது. அகந்தை நமக்குக் கூடாது. அகந்தை என்றால், பெரிய தலை (தலைக்கனம்). ஆனால், அன்போ.... பெரிய இதயம்.

**அன்பு அயோக்கியமானதைச் செய்யாது :** நமக்குத் தகுதியில்லாத ஒன்றையும் நாம் செய்யக்கூடாது. மற்றவர்களோடு ஆதரவாய், பரிவாய் இருக்க வேண்டும்.

**அன்பு தற்பொழிவை நாடாது :** நம் இஷ்டத்திற்குச் செயல்படாமல் பிறர் விருப்பம் அறிந்து நடக்க வேண்டும்.

**அன்பு சினமடையாது :** மற்றவர்களை எரிச்சல்படுத்தக்கூடாது. அன்பு கோபத்தைத் தள்ளிவிடுகிறது.

**அன்பு தீங்கு நினையாது :** பொய் சாட்சி சொல்லக்கூடாது. நம்முடைய பணத்திற்கு நாம் சரியாய்க் கணக்கு வைக்க வேண்டும். நீங்கள் மற்றவர்களால் பட்ட வேதனைக்குக் கணக்கு வைத்திருக்கிறீர்களா? வெறுப்பு உங்களிடம் உள்ளதா? நான் மன்னித்துவிட்டேன். ஆனால் என்னால் மறக்க முடியவில்லை என்கிறீர்களா? தேவன் நம்மை மன்னிக்கும்போது நம் பாவங்களை மறந்துவிடுகிறார்.

**அன்பு அநியாயத்தில் சந்தோஷப்படாது :** மற்றவர்கள் பாவத்தில் விழுந்து வேதனைப்படும் போது நாம் சந்தோஷப்படக் கூடாது. அவர்களைத் தூக்கி,

நிமிர்த்தி, சரி செய்து, உருவாக்க வேண்டும். நீதிமான்கள் உயர்த்தப்படும்போது நாம் சந்தோஷப்பட வேண்டும். உயிருள்ள சாட்சிகள் நம்மை உற்சாகப்படுத்தும்.

**அன்பு சகலத்தையும் தாங்கும் :** மற்றவர்களை பொறுத்துக் கொண்டு உதவி செய்ய வேண்டும்.

**அன்பு சகலத்தையும் விசுவாசிக்கும் :** ஒருவரிடமுள்ள சிறந்த காரியங்களை மட்டும் பார்க்க வேண்டும்.

**அன்பு சகலத்தையும் நம்பும் :** தேவ அன்பினால் நாம் நிறைந்திருக்கும் போது நடப்பதெல்லாம் நன்மைக்கே என்ற எண்ணத்தோடு இருக்க வேண்டும்.

**அன்பு சகலத்தையும் சகிக்கும் :** மற்றவர்கள் உங்களை விட்டு விலகிப்போனாலும், தேவ அன்பில் எப்பொழுதும் நிலைத்து நிற்க வேண்டும்.

அன்பு எவ்வாறு செயலாற்றுகின்றது என்கிற பெரிய விளக்கம், பட்டியலிடப்பட்டுள்ளது. இது, கிறிஸ்துவின் குணாதிசியத்தின் விளக்கம். இங்கே சொல்லப்பட்ட ஒவ்வொரு வாக்கியத்திலும் கிறிஸ்துவின் பெயரைப் போட்டுக் கொள்ளலாம். ஏன், உங்கள் பெயரையும் போட்டுக் கொள்ளலாம். உண்மையில் உங்கள் அன்பு நிறைந்த வாழ்க்கை எப்படி இருக்கும் தெரியுமா? சோதித்துப் பாருங்கள்.

### 3. அன்பு ஒருக்காலும் ஒழியாது (PERMANENCE OF LOVE) - 13:8-13

அன்பு நித்தியமான, நிரந்தரமான ஒன்று. அது ஒரு நாளும் முற்றுப் பெறாது. அதனால் தான், பவுல் “அன்பு ஒருநாளும் ஒழியாது” என்கிறார். எல்லாம் நம்மை விட்டுப் போனாலும் அன்பு ஒன்று மட்டுமே நீடித்திருக்கும். ஆவியின் வரங்கள் ஒழிந்து போகும். நம்மை உற்சாகப்படுத்தி, நம்மை நல்வழிப் படுத்தும் தீர்க்கதரிசனங்களும் ஒழிந்து போகும். நமக்கு ஆற்றலையும், பக்திவிருத்தியையும் தருகிற அந்நியபாஷைகளும் ஓய்ந்து போகும். நம்மைத் திறமையாக முன்னேறச் செய்யும் அறிவும் கூட ஒரு நாள் மறைந்து போகும். அன்பு தேவனின் உன்னத வெளிப்பாடு. அது நித்தியமானது. அன்பின் இடத்தை எதுவும் எடுக்க முடியாது. நீங்கள் செய்யும் அனைத்தும் அன்போடே செய்யப்படக்கடவது. கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

## உண்மையான எழுப்புதலின் அடையாளங்கள்

இஸ்ரவேலர் எருசலேமின் சுவர் எழுப்பப் பட்டபோது உண்மையான எழுப்புதலின் அடையாளங்களை வெளிப்படுத்தினார். (நெகமியா 8:1–10)

1. **மக்களிடையே ஒருமனம் :** ஜனங்கள் எல்லாரும் ஒரு மனப்பட்டுக் கூடினார் (8:1)
2. **வார்த்தையின் (வசனத்தின்) மீது வாஞ்சை :** சகல ஜனங்களும் நியாயப்பிரமான புத்தகத்திற்குக் கவனமாய் செவி கொடுத்தார்கள். (8:3)
3. **கர்த்தருக்குக் கனம் :** “ஜனங்களெல்லாரும் தங்கள் கைகளைக் குவித்து குனிந்து, முகங்குப்புற விழுந்து கர்த்தரைப் பணிந்து கொண்டார்கள்” (8:6)
4. **பாவத்தின் மீது வெறுப்பு :** “ஜனங்கள் எல்லாரும் நியாயப் பரிமாணத்தின் வார்த்தைகளைக் கேட்டபோது அழுதனர்....” (8:9)
5. **கர்த்தருக்குள் மகிழ்ச்சி :** “ .......... கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன் என்றான் ”

# கிறிஸ்துவ சந்தோஷம்

சந்தோஷம் என்பது சூழ்நிலைகளால் பாதிக்கப்படாதது. அது இதயத்தின் தன்மை மற்றும் மனநிலைக்குத் தக்கவாறு அமையும் ஒன்றாகும். சந்தோஷம் மிக ஆழ்ந்த தன்மையுடையது. அது மனநிறைவு மற்றும் நிச்சயம், நம்பிக்கை இவற்றின் நிரந்தர அமைவாகும். கிறிஸ்துவ சந்தோஷத்தை நாம் கீழ்க்கண்ட வழிகளில் பெறலாம்.

**1. இரட்சிப்பு :** நம் இரட்சிப்பில் சந்தோஷம் உள்ளது. இதை நாம் கிறிஸ்துவிடம் மனந்திரும்பும் போது முதன் முதலில் அனுபவிக்கிறோம். பிலிப்பிய சிறைக் காவலரைப் பற்றிக் குறிப்பிடும் போது, “தன் வீட்டார் அனைவரோடுங் கூட தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி மனமகிழ்ச்சியாயிருந்தான்” என்று (அப். 16:34) கூறப்படுகிறது. (லூக்கா 2:10 / ஏசாயா 12:3, 35:10, 61:10, சங் 51:12)

**2. வேதாகமம் :** தாவீது சந்தோஷத்தின் இத்தன்மையைப் பற்றிக் குறிப்பிடும் போது “உமது வேதம் என் மன மகிழ்ச்சியாய் இராதிருந்தால் என் துக்கத்திலே அழிந்து போயிருப்பேன்” (சங். 119:92, 54, 111) என்று குறிப்பிடுகிறார். ஏரேமியா “உம்முடைய வார்த்தைகள் கிடைத்த உடனே அவைகளை உட்கொண்டேன். உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும் என் இருதயத்துக்கு மனமகிழ்ச்சியுமாய் இருந்தது” (எரேமியா 15:16) என்று கூறுகிறார்.

**3. ஆவியில் சந்தோஷம் :** ஆவியின் கனி சந்தோஷம் ஆகும். பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும் போது நாம் சந்தோஷத்தைப் பெறுகிறோம். (ரோமர் 14:17 / சங். 36:8)

**4. ஜெபம் :** இயேசு ‘‘கேளுங்கள் அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும் படி பெற்றுக் கொள்வீர்கள்” (யோவான் 16:24) என்று கூறினார். நம் ஜெபத்திற்கு பதில் கிடைப்பதை விட ஜெபிப்பதே சந்தோஷமான ஒன்றாகும். தேவனுடைய வாக்குத்தத்தங்களில் ஒன்று “என் ஜெப வீட்டிலே அவர்களை மகிழப் பண்ணுவேன்” என்பதாகும் (ஏசாயா 56:7).

**5. ஆத்தும ஆதாயம் :** மக்களை இயேசுவிடம் கொண்டுவரும் போது சந்தோஷம் உண்டாகிறது. ஆத்தும ஆதாயம் செய்பவரின் சந்தோஷம் ஆத்தும அறுவடை செய்வதாகும். “கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கம்பீரத்தோடே அறுப்பார்கள்” (சங். 126:5) ஆத்தும தாகமோ சுவிசேஷம் அறிவிப்பதில் ஈடுபாடோ இல்லாத கிறிஸ்துவர் சந்தோஷமில்லாதவராவார்.

**6. பரிசுத்தவான்களின் ஐக்கியம் :** சங்கீதக்காரர் நான் அவர்களுடனே கூட நடந்து கூட்டத்தின் களிப்பும் துதியுமான சத்தத்தோடே தேவாலயத்திற்குப் போய் வருவேனே என்று கூறுகிறார். மேலும் தாவீது கர்த்தருடைய பிள்ளைகளோடு ஐக்கியம் கொள்ளுவதில் சந்தோஷம் உள்ளது என்று கூறுகிறார் (சங் 133:1 / 2 திமோ 1:4 / 1 யோவான் 1:3 / 4:2 / யோவான் 12) .

**7. பகிர்தல் :** பகிர்ந்து கொடுப்பதிலும் சந்தோஷம் உள்ளது. மக்க தோனியர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது, “அவர்கள் தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்” என்று அப்.பவுல் கூறுகிறார் (2 கொரி. 8:2).

“எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்” (1 தெச. 5:16)

‘‘கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாய் இருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்.” (பிலி. 4:4)

## நமக்கு எப்பொழுது எழுப்புதல் தேவை?

1. ஜெபக் கூடுகையை விட கேளிக்கை விருந்துகளுக்கு அதிக வருகை இருக்கும் போது நமக்கு எழுப்புதல் தேவை.
2. ஆரம்ப காலத்தில் நாம் தேவனை அன்பு கூர்ந்தது போல் அன்பு கூறாத போது நமக்கு எழுப்புதல் தேவை.
3. நித்தியத்தைக் குறித்து நாம் அபூர்வமாய் சிந்திக்கும் போது நமக்கு எழுப்புதல் தேவை.
4. இரட்சிக்கப்படாதவர்கள் மத்தியில் நாம் சாட்சியாய் வாழ சிறிதும் முயற்சிக்காத போது எழுப்புதல் தேவை.
5. வேதவாசிப்பு, ஜெபத்திற்கு நேரம் இல்லாமல் விளையாட்டு மற்றும் பொழுது போக்கு அம்சங்களுக்கு நேரம் செலவழிக்கும் போது.
6. நம் கிறிஸ்துவ ஜீவியம் சந்தோஷம் இல்லாமலும் வறண்டும் இருக்கும் போது.
7. நம் இதயம் வெறுமையடைந்து கண்களில் கண்ணீர் வறண்டிருக்கும் போது
8. ஆராதனையில், சபை கூடிவருதலில் சலிப்படையும் போது
9. விசுவாசிகள் அன்பிலாமலும், ஒப்புரவாகாமலிருக்கும் போது
10. விசுவாசம் அப்பியாசிக்கப்படாமலும் கூடாத காரியங்களும் தேவனால் கூடும் என்று நம்பாமலிருக்கும் போது
11. நம் இதயங்களிலும், திருமணங்களிலும், சபைகளிலும் அக்கினி அணைந்து இருக்கும் போது
12. நம் குடும்பங்கள் கூடி ஜெபிக்காத போது
13. நம் துதிபாடல்களை உற்சாகமில்லாமல் பாடும் போதும், நம் ஆராதனை உயிரோட்டமின்றி இருக்கும் போது.
14. நாம் அறிவுப் பூர்வமாக சத்தியத்தை அறிந்தும் அதன்படி நடக்காத போது
15. நம் பணத்தைக் கொடுப்பதைக் காட்டிலும், சம்பாதிப்பதில் மட்டும் அதிக கவனம் செலுத்தும் போது
16. மக்களை சபைக்குக் கொண்டு வர களிப்பூட்டும் காரியங்களைப் பயன்படுத்தும் போது.
17. உலகில் இயேசுவின் நாமத்தைக் கூட கேட்டிராத 2.5 கோடி மக்களிருக்கும் போது நாம் அசைக்கப்படாமல் (சலனமின்றி) இருக்கும் போது.
18. தேவனுடைய அற்புதங்களையும் அடையாளங்களையும் அடிக்கடி நாம் காணாத போது.
19. நம் குழந்தைகளின் ஆன்மிக நிலையைப் பற்றிக் கவலைப்படாமல் அவர்களின் கல்விப் பற்றியும் விளையாட்டு சாதனைகளைப் பற்றியும் அக்கறை கொள்ளும் போது.
20. தேவ மக்களின் (சபை விசுவாசிகளின்) ஐக்கியத்தை வாஞ்சிக்காத போது.

**எழுப்புதலே எங்கள் வாஞ்சை! எழுப்புதல் தாரும் தேவா!**

## திருச்சபைச் சீர்திருத்த முழக்கங்கள்

2017ம் ஆண்டு திருச்சபைச் சீர்திருத்தத்தின் 500ம் ஆண்டாக நினைவுக்கூறப்படுகிறது. 1517 அக்டோபர் 31ம் தேதி ஜெர்மனியிலுள்ள விட்டன்பர்க் நகரின் சகல பரிசுத்தவான்கள் ஆலயக் கதவில், வேதத்திற்கு புறம்பான நம்பிக்கைகள் மற்றும் செயல்பாடுகளுக்கு எதிரான, தனது 95 நியாயங்களை (Theses) மார்ட்டின் லூர்த்தர் ஆணியறைந்தார்.

திருச்சபை, அது இருக்கும் நிலையிலிருந்து அது இருக்கவேண்டிய நிலைக்குக் கொண்டு வரவே சீர்திருத்தம். சீர்திருத்தம் என்பது எழுப்புதல், மறுமலர்ச்சி, ஆதிநிலையேகுதல் ஆகியவற்றை உள்ளடக்கும். சீர்திருத்தம் என்பது தவறுகளைத் திருத்துவதும், துர்ப்பிரயோகங்களையும், சீர்கேட்டையும் அகற்றுவதுமாகும்.

**சீர்திருத்தத்தின் முழக்கங்கள்**

500

1. பைபிள் மட்டுமே (Scripture Alone - Sola Scriptura)
2. விசுவாசம் மட்டுமே (Faith Alone - Sole Fide)
3. கிருபை மட்டுமே (Grace Alone - Sola Gratia)
4. கிறிஸ்து மட்டுமே (Christ Alone - Solus Christus)
5. தேவ மகிமை மட்டுமே (Glong of God Alone - Soli Deo Gloria)

**1. பைபிள் மட்டுமே** (Scripture Alone - Sola Scriptura)

வேத வாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது (2 தீமோ.3:16). பைபிளில் குறைவற்றது (Inerrant), தவறாதது (Infallible) , பைபிள் அழிக்க முடியாதது (Undestructible) - சங். 19:7, யோவான் 10:35; மாற்கு 13:31. பைபிள் நமக்குப் போதுமானது (Sufficient). எனவேதான் 'எழுதப்பட்டதற்கு மிஞ்சி' எண்ணவும் கூடாதென அப்போஸ்தலர் அடித்துக் கூறினர் (1 கொரி.4:6). வேதத்தோடு நாம் எதையும் கூட்டவோ, குறைக்கவோ கூடாது (வெளி. 22:18,19). வேதத்தோடு பாரம்பரியங்களையும் முக்கியமானவையென்று பல சபைகள் வைத்துக்கொள்ளுகின்றன. இப்போக்கை தமது காலத்தில் இயேசு வெகுவாகக் கண்டித்தார் (மாற்கு 7:9,13). "பைபிள் என்ன சொல்லுகிறது" என்பதே நமது முழு வாழ்க்கையின் கோட்பாடாய் இருக்க வேண்டும் (ரோமர் 4:3; 10:8; 11:2).

**2. விசுவாசம் மட்டுமே** (Faith Alone)

மார்டின் லூத்தரின் சிந்தையைக் கிளறிவிட்டுக், கொழுந்துவிட்டு எரியச் செய்த வேத வசனம், 'விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்' (ரோமர் 1:16, 17). இதின் கருத்து என்னவெனில், மார்க்கத்தின் எவ்வித கிரியைகளினாலும் அல்ல, கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தினாலேயே நாம் இரட்சிக்கப்படுகிறோம் என்பதே (எபே.2:8, 9). அப்படியானால், 'கிரியை இல்லாத விசுவாசம் செத்தது' (யாக்.2:17) என்னும் வசனத்தின் பொருளென்ன? நற்கிரியைகள், இரக்கச் செயல்களையே இப்பகுதியில் யாக்கோபு குறிப்பிடுகிறார் (2:14-16). கிரியைகளை இரட்சிப்புக்கு நிபந்தனையாய் அல்ல, அதற்கு நிரூபணமாய்ப் பேசுகிறார்.

**3.கிருபை மட்டுமே** (Grace Alone)

நாம் இரட்சிக்கப்படுதல், நீதிமானாக்கப்படுதல் என்பது நம்மைப் பொருத்தவரை முழுக்க முழுக்க விசுவாசத்தினால் மட்டுமே. தேவனைப் பொருத்தவரை முழுக்க முழுக்க கிருபையினால் மட்டுமே(வாசியுங்கள் ரோமர் 3: 23,24). இரட்சிப்பு என்பது தேவ கிருபையினால் நமக்கு கிடைக்கும் அவரது 'ஈவு' (எபே. 2:8,9) அது ஒரு 'பரிசு' அல்ல, அது ஒரு 'ஈவு' (Not an award or a reward or a prize,but a gift). ஈவு என்பதைச் சம்பாதிக்கவோ, அதற்காய்த் தகுதிபெறவோ முடியாது.

கிருபை என்பது பாவம் செய்வதற்கு உரிமம் அல்ல. பாவத்தை மேற்கொள்ள தேவன் நமக்குள் வைக்கும் அனுகூலமே அது (ரோமர் 6:14). நமது ஜெபங்களை தேவனிடம் கொண்டு சேர்ப்பது நமது விசுவாசமானால், பதில்களை தேவனிடமிருந்து கொண்டுவருவது அவரது கிருபையே, எனவேதான் அவரது ஆசனம் கிருபாசனம் எனப்படுகிறது. தேவனது அனுதினக் கிருபைக்காக அவரைத் துதியுங்கள் (புல. 3:22, 23).

**4.கிறிஸ்து மட்டுமே** (Christ Alone)

கிறிஸ்து மட்டுமே என்ற இம்முழக்கத்திற்கு பல உட்கூறுகள் உண்டு. அவையாவன:

1. கிறிஸ்துவே இரட்சிபிற்கு ஒரே வழி (யோவான் 14:16, அப். 4:12)
2. கிறிஸ்துவே ஒரே மத்தியஸ்தர் (1 தீமோ. 2:56)
3. கிறிஸ்துவே நமக்காய்த் தேவனுக்கு முன் ஒரே ஆசாரியர் (எபி. 7:24, 25)
4. கிறிஸ்துவே திருச்சபையின் ஒரே அஸ்திபாரம் (1 கொரி. 3:6,11)
5. கிறிஸ்துவை எவரோடும் ஒப்பிட முடியாது
6. கிறிஸ்துவின் மூலமே அனைத்து தேவ ஆசிர்வாதங்கள் (எபே. 1:3)
7. கிறிஸ்துவே ஒரே ஆண்டவர் (அப். 10:36)

**5.தேவ மகிமை மட்டுமே** (Glory of God Alone)

மனிதன் முடிவான நோக்கம் தேவனை மகிமைப்படுத்துவதே. நீங்கள் புசித்தாலும், குடித்தாலும் எதைச் செய்தாலும் தேவ மகிமைக் கென்றே செய்யுங்கள் என்று வேதம் கூறுகிறது (1 கொரி. 10:31). அனைத்துக் காரியங்களிலும் தேவனுக்கே மகிமை சேர்ப்பதற்கு நிகரற்ற எடுத்துக்காட்டு இயேசுவின் வாழ்க்கையே. அவரது பிறப்பில், வாழ்வில், செய்கைகளில் தேவன் மகிமைப்பட்டார் (லூக்கா 2:14, மத் 9:8, யோவான் 17:4). தேவனுக்கே மகிமை செலுத்தும் இக்காரியத்தில் அப்போஸ்தலர் மிகவும் கவனமாயிருந்தார் (அப் 3:12,13, 10:25,26, 14:11,15). பிரியமானவர்களே, நமது வாழ்வில் பல நல்ல காரியங்கள் இருக்கலாம். ஆனால் அவை ஒன்றைக் குறித்தும் நாம் பெருமையடிக்கக்கூடாது. கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டுவோம். அவருக்கே சகல மகிமையையும் செலுத்துவோம். (எரே. 9:23,24, 1 கொரி. 1:29,31). எங்களுக்கு அல்ல, கர்த்தாவே, எங்களுக்கு அல்ல, உமது நாமத்திற்கே மகிமை வரப்பண்ணும் என்பதே நமது ஜெபமாகவும் முழக்கமாகவும் இருக்கட்டும் (சங். 115:1)

(இந்த செய்தி **நான் நிற்கும் கன்மலை** என்ற புத்தகத்திலிருந்து தொகுத்து எழுதப்பட்டது).

# 21 நாட்கள் உபவாச ஜெபம்



# 21 DAYS FASTING PRAYER

**அக்டோபர் 1 ஞாயிறு முதல் 21 சனி வரை**

| GOALS FOR 2017 | |
|---|---|
| 100 | New Families |
| 100 | Baptism |
| 100 | Holy Spirit Baptism |
| 5 | Outreach Ministries |
| 20 | New Leaders |
| 20 | New Prayer Cells |

| 2017 சபை இலக்குகள் | |
|---|---|
| 100 | புதிய குடும்பங்கள் |
| 100 | ஞானஸ்நானம் |
| 100 | பரிசுத்த ஆவி அபிஷேகம் |
| 5 | புதிய கிராம ஊழியங்கள் |
| 20 | புதிய தலைவர்கள் |
| 20 | புதிய ஜெபக்குழுக்கள் |

## Sunday Services - ஞாயிறு ஆராதனைகள்

| | | |
|---|---|---|
| I Tamil Service | 7.00 am - 8.45 am | முதல் தமிழ் ஆராதனை |
| English Service | 9.00 am - 10.45 am | ஆங்கில ஆராதனை |
| II Tamil Service | 11.00 am - 12.30 pm | 2-ம் தமிழ் ஆராதனை |
| Evening Service | 6.30 pm - 8.00 pm | மாலை ஆராதனை |
| Children Service | 7.30 am, 9.30 am | சிறுவர் ஆராதனை |
| Youth Meeting | 1st Sunday-11.00 am (Eng)<br>2nd Sunday-4.00 pm (Tamil) | வாலிபர் ஆராதனை |

## Weekly Meetings - வாராந்திர ஊழியங்கள்

| | | |
|---|---|---|
| Family Counselling | Tuesday - செவ்வாய்<br>10.30 am - 1.00 pm | குடும்ப ஆலோசனை |
| Women's Prayer | Thursday - வியாழன்<br>10.30 am - 1.00 pm | பெண்கள் ஜெபம் |
| Prayer Cells | Wed/Thu - புதன் / வியாழன்<br>7.00 pm - 8.00 pm | ஜெபக்குழுக்கள் |
| Intercessory Night Prayer | Ist Friday - வெள்ளி<br>7.00 pm - 10.00 pm | மன்றாட்டு இரவு ஜெபம் |
| Chain Prayer | IVth Friday - வெள்ளி<br>6.00 a.m - 6.00 a.m | சங்கிலி ஜெபம் |
| Early Morning Communion Service | 1st Day of the Month,<br>மாதத்தின் முதல் நாள்<br>5.00 a.m - 6.30 a.m | அதிகாலை திருவிருந்து ஆராதனை |

**Magazine Subscription**
Bi -Monthly : Rs.20/-
Yearly : Rs.100/-
Postage : Rs.25/- Extra

**Send Your prayer requests @ www.cityrevivalagchurch.org**

# City Revival A.G. Church

*Warmly Welcomes you to the*

## PRAISE & WORSHIP SERVICES

**EVERY SUNDAY**

| | |
|---|---|
| **Tamil Service** | **- 7.00 a.m, 11.00 a.m** |
| **English Service** | **- 9.00 a.m** |
| **Evening Service** | **- 6.30 p.m** |

**ஞாயிறு தோறும்**

| | |
|---|---|
| தமிழ் ஆராதனை | 7.00 மணி, 11.00 மணி |
| ஆங்கில ஆராதனை | 9.00 மணி |
| மாலை ஆராதனை | 6.30 மணி |

**Venue : A/c Hall, 1st Floor, JENNE PLAZA,**
No.5, Bharathiyar Salai, (Near Head Post Office),
Cantonment, Trichy - 1.

**Anointed and Lively Worship, Soul-stirring Music & Practical, Life-changing Messages**

*Come with your friends & family & Receive the blessings of God*



**Sunday School is conducted for kids below 14 years**






**Rev. Dr. JERRY DANIEL**

**Cell : 94434 15484, 98423 15484**

www.facebook.com/jerrydanieltrichy

jerrydanieltrichy@gmail.com

www.cityrevivalagchurch.org